RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை மலர்-5 இதழ்- 188 ஜூலை.14 2026 செவ்வாய்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

# தமிழகத்தில் பசு வதைக்கு சென்னை உயர் நீதிமன்றம் விதித்த தடையை நிறுத்தி வைத்தது உச்ச நீதிமன்றம்

புதுடெல்லி: ஜூலை.14-

தமிழகத்தில் பசு வதைக்கு சென்னை உயர் நீதிமன்றம் விதித்த தடை உத்தரவை உச்ச நீதிமன்றம் நிறுத்தி வைத்தது.

பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு, தமிழகத்தில் பசுக்கள் பொது இடங்களில் வெட்டப்படுவதற்கு தடை விதிக்கக் கோரி இந்து மக்கள் கட்சியின் பொதுச் செயலாளர் சூர்ய பிரசாத் சென்னை உயர் நீதிமன்றத்தில் பொது நல மனு தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம், 'தமிழகத்தில் எந்த நாளிலும் பசுக்கள் மற்றும் கன்றுகளை கொல்ல மாநிலம் முழுவதும் தடை விதிக்கப்படுகிறது.

எனவே, மே 28 பக்ரீத் பண்டிகைக்கு முந்தைய நாளோ, மறு நாளோ மாநிலத்தின் எந்தப் பகுதியிலும் பசுவோ அல்லது கன்றோ கொல்லப்படாமல் இருப்பதை தலைமைச் செயலாளரும் காவல் துறை தலைவரும் உறுதி செய்ய வேண்டும்' என்று மே 27ம் தேதி உத்தரவிட்டது.



மேலும், விலங்குகளைக் கொல்லுதல் என்பது அங்கீகரிக்கப்பட்ட இறைச்சிக் கூடங்களில் மட்டுமே நடைபெற வேண்டும் என்றும் உயர் நீதிமன்றம் தனது உத்தரவில் தெரிவித்திருந்தது.

இந்த உத்தரவை எதிர்த்து ஜூலை 1ம் தேதி தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தது. இந்த மனு நீதிபதிகள் விக்ரம் நாத், சந்தீப் மேத்தா ஆகியோர் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்தது.

அப்போது தமிழக அரசு சார்பில், 'விலங்குகளைக் கொல்லுதல் என்பது அங்கீகரிக்கப்பட்ட இறைச்சிக் கூடங்களில் மட்டுமே நடைபெற வேண்டும் என்று உயர் நீதிமன்றம் சரியாகக் குறிப்பிட்டிருந்தாலும், பக்ரீத் அல்லது வேறு எந்த நாளிலும் பசு அல்லது கன்றைக் கொல்லக் கூடாது என்றும் அது உத்தரவிட்டுள்ளது. இந்த உத்தரவுகள் முரண்பாடானவை. மேலும், மனுதாரரின் கோரிக்கைக்கும் மேலாகச் சென்று இந்த தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்ப்பு, தமிழ்நாடு விலங்குகள் பாதுகாப்புச் சட்டம் 1958ன் விதிகளுக்கு முரணானது. இந்த சட்டத்தின்படி, 10 வயதுக்கு மேற்பட்ட வேலைக்கோ, இனப்பெருக்கத்துக்கோ தகுதியற்ற பசுக்களை தகுந்த அதிகாரியிடம் இருந்து சான்றிதழ் பெற்று பிறகு கொல்ல அனுமதிக்கப்படுகிறது' என வாதிடப்பட்டது.

இதையடுத்து, சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் கடைசி பத்தியில் திருத்தம் தேவைப்படுவதாகத் தோன்றுகிறது என தெரிவித்த நீதிபதிகள், சென்னை உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கு இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டனர்.

## ஆத்தூர் பாதுகாப்பு மையத்தில் இருந்து தப்பியோடிய 12 சிறார்கள் தேடும் பணியில் போலீசார் தீவிரம்

செங்கல்பட்டு, ஜூலை.14-

ஆத்தூர் அரசினர் பாதுகாப்பு மையத்தில் இருந்த 12 சிறார்கள் காவலர்களை தாக்கி விட்டு தப்பியோடிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.




செங்கல்பட்டு அடுத்த ஆத்தூர் பழத்தோட்டம் பகுதியில் காஞ்சிபுரம் செங்கல்பட்டு நெடுஞ் சாலையில் அரசினர் பாதுகாப்பு பயிற்சி மையம் ஒன்று உள்ளது. இங்கு குற்றச்சம்பவங்களில் ஈடுபட்ட 18 வயதிற்கு கீழ் உள்ளவர்கள் தங்க வைக்கப்பட்டு, பேக்கரி தொழில் உள்ளிட்ட பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. இங்கு தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் இருந்து 72 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை (ஜூலை 12) பயிற்சி நிலையத்தின் வார்டன் அங்கு தங்கி இருக்கும் சிறார்களுக்கு இரவு உணவளிக்க சென்றதாகக் கூறப்படுகிறது. சிறார்கள் தங்கிருந்த அறையின் கதவை திறந்து உணவு அளிக்க சென்றபோது, அவரை தாக்கி 12 சிறார்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

மேலும், நுழைவு வாயிலில் இருந்த பாதுகாப்பு காவலர் ஏழுமலையையும் தாங்கி அவரிடமிருந்து சாவியை பறிந்து மெயின் கேட்டை திறந்து அங்கிருந்து தப்பி வெளியே ஓடிவந்துள்ளனர். அங்கிருந்து எப்படியாவது தப்பிக்க, சாலை வழியாக சென்ற 3 நபர்களை தாக்கி அவர்களிடம் இருந்து இருசக்கர வாகனம் மற்றும் செல்போன் ஆகியவற்றை பறிந்துகொண்டு, ஒரு வாகனத்திற்கு 4 பேர் என்ற விதம் மூன்று இருசக்கர வாகனத்தில் அங்கிருந்து தப்பியோடியதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

சிறார்கள் காவலர்களை தாக்கி தப்பி சென்ற தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த செங்கல்பட்டு தாலுகா போலீசார், காயமடைந்தவர்களை மீட்டு செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர்.

இந்த சம்பவத்தில் சாலையில் தாக்கப்பட்டு இருசக்கர வாகனம் மற்றும் செல்போனை பறிகொடுத்தவர்கள் காவூர் பகுதியை சேர்ந்த பழனி, சாத்தனாஞ்சேரி பகுதியை சேர்ந்த சோலைப்பன் மற்றும் மாடம்பாக்கம் பகுதியை சேர்ந்த ஆரோக்கியசாமி ஆகியவர்கள் என்பது தெரியவந்தது.


மேலும், அவர்களிடம் இருந்து இருசக்கர வாகனத்தை பறிந்த சிறார்களில் 6 பேர் காஞ்சிபுரம் மார்க்கமாகவும், 6 பேர் செங்கபட்டு மார்க்கமாகவும் தப்பிச் சென்றதாக பாதிக்கப்பட்டவர்கள் போலீசாரிடம் தெரிவித்தனர்.

இதனையடுத்து, கூடுதல் போலீசாரும் பாதுகாப்பு மையத்தில் குவிக்கப்பட்டனர். தொடர்ந்து, தப்பி சென்ற சிறார்களை பிடிக்கும் பணியில் செங்கல்பட்டு போலீசார் தீவிரமாக ஈடுபட்ட நிலையில், முதற்கட்டமாக 3 பேரை பிடித்துள்ளதாக போலீசார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ளவர்களை பிடிக்கும் முயற்சியில் போலீசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

## வளைகுடா நாடுகள் மீது ஈரான் தீவிர தாக்குதல்: துல்லிய தாக்குதல்கள் மூலம் அமெரிக்கா பதிலடி

தெஹ்ரான், ஜூலை.14-

ஜோர்டான், பஹ்ரைன் மற்றும் குவைத்தில் உள்ள அமெரிக்க ராணுவ தளங்கள் மீது தாக்குதல் நடத்தியதாக ஈரான் ராணுவம் தெரிவித்துள்ளது. தென்மேற்கு ஈரானில் அமெரிக்கா நடத்திய தாக்குதல்களில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும், நால்வர் காயமடைந்ததாகவும் ஈரான் அரசு ஊடகங்கள் தெரிவித்தன.



ஜோர்டானில் உள்ள பிரின்ஸ் ஹசன் விமான தளம், பஹ்ரைனில் உள்ள அமெரிக்க ராணுவ ட்ரோன் கட்டுப்பாட்டு மையம் மற்றும் குவைத்தில் உள்ள அலி அல் சலீம் உள்ளிட்ட விமான தளங்கள் மீது தாக்குதல் நடத்தியதாக ஈரான் ராணுவம் தெரிவித்துள்ளது. வளைகுடா நட்பு நாடுகள் பலவற்றின் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து, அமெரிக்க ராணுவம் ஈரான் மீது தாக்குதல்களை அதிகரித்துள்ளது.

ஹார்முஸ் வழியாகச் செல்லும் கப்பல்கள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தும் ஈரானை கட்டுப்படுத்தும் வகையில், துல்லியமான ஆயுதங்களைப் பயன்படுத்தி ஈரானின் பல இடங்களில் தாக்குதல்களை நிறைவு செய்துள்ளதாக அமெரிக்க மத்திய கட்டளை மையம் (CENT-COM) தெரிவித்துள்ளது. இந்த தாக்குதல்களில் தென்மேற்கு ஈரானில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும், நான்கு பேர் காயமடைந்ததாகவும் ஈரான் அரசு ஊடகங்கள் இன்று செய்தி வெளியிட்டுள்ளன.

ஓமனில் உள்ள ரேடார் அமைப்புகளை அழித்ததாகவும், மனாமா நகரின் தெற்குப் பகுதியில் உள்ள அமெரிக்க ராணுவக் கட்டமைப்புகளை தாக்கியதாகவும் ஈரான் ராணுவம் தெரிவித்தது. மேலும், பஹ்ரைனின் ஜுஃபைர் பகுதியில் உள்ள அமெரிக்க ராணுவக் கட்டமைப்புகளைத் தாக்கியதாகவும் ஈரான் தரப்பு தெரிவித்தது.

அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையே மீண்டும் தாக்குதல்கள் அதிகரித்ததால், ஹார்முஸ் ஜலசந்தி வழியாகச் செல்லும் கப்பல்களின் எண்ணிக்கை பல வாரங்களில் இல்லாத அளவுக்கு மிகவும் குறைந்துள்ளது. அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையே மோதல் வெடித்ததைத் தொடர்ந்து, நேற்று கச்சா எண்ணெய் விலை 4%க்கும் அதிகமாக உயர்ந்தன.

### பின்னணி என்ன?

அணு ஆயுதத் தடை ஒப்பந்தத்தில் ஈரான் கையெழுத்திட மறுத்தது உள்ளிட்ட காரணங்களால், ஈரான் மீது அமெரிக்கா இஸ்ரேல் படைகள் கடந்த பிப்ரவரி 28ம் தேதி தாக்குதல் நடத்தின. ஒரு மாதத்துக்கு மேல் நீடித்த இந்த மோதல் அமெரிக்கா ஈரான் இடையே அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டதால் முடிவுக்கு வந்தது.

ஆனால் ஹார்முஸ் ஜலசந்தி பகுதியில் குறிப்பிட்ட வழித்தடத்தில்தான் எண்ணெய்க் கப்பல்கள் கடந்து செல்ல வேண்டும், ஓமன் கடற்கரை வழியாக கடந்து செல்லக் கூடாது என்று ஈரான் கட்டுப்பாடுகள் விதித்தது. ஈரான் உத்தரவை மீறி ஓமன் கடற்கரை வழியாக ஹார்முஸ் ஜலசந்தியை கடந்த 3 எண்ணெய்க் கப்பல்களைக் கடந்த வாரம் ஈரான் தாக்கியது.

இது அமைதி ஒப்பந்தத்தை மீறிய செயல் என்றுகூறி, ஈரான் மீது அமெரிக்கா தாக்குதலை தொடங்கியது. இதையடுத்து ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் மூடியது. இதனால் ஈரானின் 140 இலக்குகளைக் குறிவைத்து அமெரிக்கா நேற்று முன்தினம் இரவு 3வது சுற்று தாக்குதல் நடத்தியது. அமெரிக்காவின் தாக்குதல்களுக்கு பதிலடி கொடுக்கும் வகையில், அதன் வளைகுடா நட்பு நாடுகள் மீது ஈரான் தாக்குதல்களை நடத்தி வருகிறது.

## சிவகங்கையில் ரூ.15 கோடி மதிப்பிலான மெத்தம்பெட்டமைன் பறிமுதல் கடத்தலை முறியடித்த காவல்துறை

சிவகங்கை, ஜூலை.14-

சிவகங்கையில் ரூபாய் 15 கோடி மதிப்பிலான மெத்தம்பெட்டமைனைப் பறிமுதல் செய்த காவல்துறையினர், 4 பேரை கைது செய்தனர்.



சிவகங்கை டவுன் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட இந்திரா நகர் ரயில்வே கேட் பகுதியில், போதைப்பொருள் கடத்தப்படவுள்ளதாக காவல்துறைக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து, காவல்துறையினர் அப்பகுதியில் தீவிர கண்காணிப்பு மற்றும் வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது சந்தேகத்திற்கிடமான வகையில் இருந்த நான்கு பேரை பிடித்து விசாரணை நடத்தினர். அவர்களிடம் காவல்துறையினர் நடத்திய கிடுக்குப்பிடி விசாரணையில் போதைப்பொருட்கள் கடத்தப்படவிருந்தது தெரிய வந்தது.

இதையடுத்து, அவர்கள் நான்கு பேரையும் கைது செய்த காவல்துறையினர், அவர்களிடம் இருந்து சுமார் 3.020 கிலோ மெத்தம்பெட்டமைன் போதைப்பொருளையும், 3 செல்போன்களையும் பறிமுதல் செய்தனர். பறிமுதல் செய்யப்பட்ட மெத்தம்பெட்டமைனின் மதிப்பு ரூபாய் 15 கோடி என்றும் கூறப்படுகிறது. கைது செய்யப்பட்டவர்கள் இளையான்குடி மற்றும் திருச்சி பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என காவல்துறை தெரிவித்துள்ளது.

அவர்களிடம் காவல் துறையினர் நடத்திய முதற்கட்ட விசாரணையில், பறிமுதல் செய்யப்பட்ட போதைப்பொருளை வெளிநாடான மலேசி யாவிற்கு கடத்தத் திட்டமிட்டிருந்தது தெரிய வந்துள்ளது. மேலும், அவர்கள் பல ஆண்டுகளாக "குருவிகள்" என்ற பெயரில் செயல்பட்டு போதைப்பொருள் கடத்தல் வலையமைப்பில் ஈடுபட்டு வந்ததும் தெரிய வந்துள்ளது.

சிவகங்கை நகர காவல்நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு கைது செய்யப்பட்ட 4 பேரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்க காவல்துறையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். அவர்க ளுடன் தொடர்பு டைய மற்ற நபர்கள் யார்?, போதைப்பொருள் எங்கிருந்து கொண்டு வரப்பட்டது?. இதற்கு பின்னால் செயல்படும் முக்கிய கும்பல் யார்?, வெளிநாட்டு தொடர்புகள் உள்ளனவா? என்பது உள்ளிட்ட பல்வேறு கோணங்களில் காவல்துறையினர் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

சமூகத்தில் போதைப் பொருள் புழக்கத்தை கட்டுப்படுத்தவும், சர்வதேச கடத்தல் கும்பல்களின் செயல்பாடுகளை முறியடிக்கவும் காவல்துறையினர் தொடர்ந்து தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

போதைப் பொருட்களை ஒழிக்க தமிழ்நாடு அரசு சார்பில் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், காவல்துறையினரும் அவ்வப்போது வாகன சோதனைகளை நடத்தி வருகின்றனர். குறிப்பாக, ரயில்களிலும் ரயில்வே காவல்துறையினர் தொடர்ந்து சோதனை நடத்தி வருகின்றனர். கர்நாடகா, ஆந்திரா, கேரளம் ஆகிய மாநிலங்களின் எல்லைப் பகுதிகளிலும் வாகன சோதனை நடைபெற்று வருகிறது. இதன்மூலம், போதைப்பொருட்கள் கடத்தல் சம்பவம் அதிகளவில் முறியடிக்கப் பட்டுள்ளது.



■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் ரூ.13,800 மதிப்பீட்டில் பார்வையற்றோர், காது கேளாதோர் மற்றும் வாய் பேச இயலாத மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பு வசதிகளுடன் கூடிய கைபேசியை வழங்கினார்.



## நீலகிரி மாவட்ட சமூக தன்னார்வலர்கள் கூட்டமைப்பின் சார்பில் இலவச கண் பரிசோதனை முகாம்

நீலகிரி, ஜூலை.14-
நீலகிரி மாவட்ட சமூக தன்னார்வலர்கள் கூட்டமைப்பின் சார்பில் இலவச கண் பரிசோதனை முகாம் விலையில்லா கண் கண்ணாடி வழங்கும் முகாம் நடைபெற்றது நூறுக்கும் மேற்பட்ட பயனாளிகள் கலந்து கொண்டனர் , கூட்டமைப்பின் நீலகிரி மாவட்ட இணை செயலாளர் ஜார்ஜ் பிரிட்டோ அனைவரையும் வரவேற்றார், தமிழக வெற்றி கழகத்தின் நீலகிரி மாவட்ட பொறுப்பாளர் ரமேஷ் நிகழ்வினை துவக்கி வைத்தார் அவருடன் மாவட்ட நிர்வாகிகளும் கலந்து கொண்டனர், சிறப்பாக பணியாற்றிய தன்னார்வலர்களுக்கு நேரு யுவகேந்திரா ரஞ்சித் , அப்துல் கலாம் நினைவு அறக்கட்டளை சாதிக், அப்துல் கலாம் உதவும் கரங்கள் லாரன்ஸ், நீலகிரி கல்வி அறக்கட்டளை ஜாஃபர், நீலகிரி மக்கள் உரிமைகள் அமைப்பின் வினோத்குமார் நினைவு பரிசுகளை வழங்கினர் , நீலகிரி மாவட்ட சமூக தன்னார்வலர் கூட்டமைப்பின் மாவட்ட தலைவர் சுரேஷ் ரமணா நன்றி உரையாற்றினார் , தமிழ் இயக்கத்தின் மாணவரணி பொறுப்பாளர் சுதிர் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்



## 25 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் மகா கும்பாபிஷேக பெருவிழா

வாணியம்பாடி, ஜூலை.14-
திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த சென்னாம்பேட்டை பகுதியில் அருள் பாலித்து வரும் அருள்மிகு செல்வ விநாயகர் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரிஅம்மன் அருள்மிகு ஸ்ரீ தேசத்து மாரிஅம்மன் மற்றும் அருள்மிகு ஸ்ரீ வித்யா கணபதி அருள்மிகு நாகால்அம்மன் அருள்மிகு நவகிரகம் மற்றும் அருள்மிகு பரிவார மூர்த்திகள் ஆலய திருக்கோயில்கள் அனைத்திற்கும் 12.7.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் 11 மணிக்குள்ளாக அனைத்து கோயில்களுக்கும் மகா பூணரோத்தாரண அஷ்ட பந்தன மகாகும்பாபிஷேக பெருவிழா ஊர் தலைவர்.மனோகரன் தலைமையில் ஊர் நிர்வாகிகள் மற்றும் இளைஞர்கள் முன்னிலையில், கடந்த 6ஆம் தேதி காப்பகட்டுதல் 9ஆம்தேதி முளைப்பாரி திருவீதியுலா 10ஆம்தேதி கோபுர கலச ஸ்தாபனம் 11 ஆம் தேதி இரண்டாம் கால யாக பூஜைகளும் 3ஆம்கால யாக பூஜைகளும் நடைபெற்றது. பிறகு 12 ஆம் தேதி நான்காம்கால மகா பூணரோத்தாரணதி மகா சங்கல்பம் கலசபுரபாடும் யாகபூஜையும் நடைபெற்றது பிறகு பகல் 9மணி முதல் 11 மணிக்குள்ளாக அருள்மிகு செல்வ விநாயகர் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரிஅம்மன் அருள்மிகு ஸ்ரீ தேசத்து மாரிஅம்மன் மற்றும் அருள்மிகு ஸ்ரீ வித்யா கணபதி அருள்மிகு நாகால்அம்மன் அருள்மிகு நவகிரகம் மற்றும் அருள்மிகு பரிவார மூர்த்திகள் அணைத்து தெய்வங்களுக்கும் மகா அஷ்டபந்தன மகாகும்பாபிஷேக பெருவிழாவானது 1000 கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு மகா கும்பாபிஷேக பெருவிழா நடைபெற்றது.

## செங்கல்பட்டு மாவட்டத்தில் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் மாவட்ட ஆட்சியர் அறிவிப்பு

செங்கல்பட்டு, ஜூலை.14-
செங்கல் பட்டு மாவட்டத்தில் படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு செங்கல்பட்டு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் மூன்றாவது வெள்ளிக்கிழமை 17.07.2026அன்று சிறிய அளவிலான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெற உள்ளது. இம்முகாமில் 50க்கும் மேற்பட்ட முன்னணி தனியார் துறை நிறுவனங்கள் மற்றும் திறன் பயிற்சி அளிக்கும் நிறுவனங்கள் கலந்து கொண்டு தங்களது மனிதவள தேவைக்குரிய சுமார் 5000 க்கும் மேற்பட்ட பணிக்காலியிடங்களை நேர்முக தேர்வு நடத்தி தேர்வு செய்ய உள்ளனர்.



இவ்வேலை வாய்ப்பு முகாமில் கலந்து கொள்வதற்கு வேலையளிப்பவர் மற்றும் வேலை நாடுநர்களுக்கு அனுமதி முற்றிலும் இலவசம். மேலும் வேலையளிப்பவர் மற்றும் வேலை நாடுநர்கள் www.tnprivatejobs.tn.gov.inஎன்ற இணையதளத்தில் பதிந்து கொள்ளலாம். இவ்வேலைவாய்ப்பு முகாமில் எட்டாம் வகுப்பு, 10ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு, பட்டப்படிப்பு பி.இ, ஐடிஐ மற்றும் டிப்ளமோ, செவிலியர்கள், மருந்தாளுநர், ஆய்வக உதவியாளர்கள் போன்ற கல்வித் தகுதி உடைய வேலைநாடுநர்கள் மற்றும் மாற்றுத்திறனாளி வேலைநாடுநர்களும் கலந்துகொண்டு வேலைவாய்ப்பினை பெறலாம். வயது வரம்பு 18 முதல் 40வயது வரை உள்ளவர்கள் தங்களுடைய கல்வி சான்றிதழ்கள்நகல்கள், சுய விவர குறிப்பு (பயோடேட்டா) மற்றும் பாஸ்போர்ட் அளவிலான புகைப்படத்துடன் 17.07.2026 வெள்ளிக் கிழமை அன்று காலை 09.00 மணி முதல் 2.00 மணி வரை செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலக ஒருங்கிணைந்த கட்டிடம், தரைத்தளம், டி பிளாக், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்திற்கு நேரில் வந்து வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு வேலைவாய்ப்பினை பெறலாம்.

## மதுரை சி.இ.ஓ.ஏ. மேல்நிலைப்பள்ளியில் காமராஜர் பிறந்தநாள் கல்வித் திருவிழா:மாநில அளவிலான NMS பேச்சுப்போட்டி



மதுரை, ஜூலை.14-
123வது காமராஜர் பிறந்தநாளை முன்னிட்டு நடைபெற்ற "NMS கல்வித் திருவிழா-2026" மாநில அளவிலான மாணவ, மாணவியருக்கான பேச்சுப்போட்டியின் முதற் சுற்று, மதுரை சி.இ.ஓ.ஏ. மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது.தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் ஆர்வமுடன் பங்கேற்று, காமராஜரின் கல்விச் சிந்தனைகள், நாட்டுப்பற்று, தலைமைத்துவம் மற்றும் சமூகப் பொறுப்பு உள்ளிட்ட தலைப்புகளில் தங்களது பேச்சுத் திறனை வெளிப்படுத்தினர். நடுவர்களின் மதிப்பீட்டின் அடிப்படையில், சுபவிகாஷினி (சி.இ.ஓ.ஏ. பள்ளி, கோசாகுளம்), தியா கணேஷ் (எஸ்.பி.ஓ.ஏ. பள்ளி, நாகமலை), ராஜாராம் (அரசுப் பள்ளி, சேக்கிப்பட்டி) ஆகியோர் முதல் மூன்று இடங்களைப் பெற்று மாநில அளவிலான இறுதிச்சுற்றுக்கு தகுதி பெற்றனர். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுத்தொகை வழங்கி பாராட்டப்பட்டது. இறுதிச்சுற்றுப் போட்டிகள் ஜூலை 14 மற்றும் 15 ஆகிய தேதிகளில் விருதுநகரில் நடைபெற உள்ளன.விழாவில் மதுரை தமிழ்நாடு வர்த்தக சபை தலைவர் டாக்டர் என். ஜெகதீசன், தெற்குவாசல் நாடார் வித்தியாசாலை பள்ளிகள் செயலாளர் பார்த்திபன், நா.ம.ச். சேர்மத்தாய்வாசன் மகளிர் கல்லூரி செயலாளர் பாலகுரு, சி.இ.ஓ.ஏ. கல்விக்குழும நிறுவனத் தலைவர் டாக்டர் இராசா கிளைமாக்ஸ், தலைவர் டாக்டர் சாமி, முதல்வர்கள், ஆசிரியர்கள், கல்வியாளர்கள், அரசு அதிகாரிகள், தொழிலதிபர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.இந்த விழாவை மதுரை மாவட்ட செயலாளர் வெற்றிவேல் சிறப்பாக ஒருங்கிணைத்தார்.

## செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் மாணவர், இளைஞர் ஒற்றுமைக் கூடல் சமூக ஒற்றுமையை வலியுறுத்தி தலைவர்கள் அழைப்பு



தாம்பரம், ஜூலை.14-
செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மேற்கு பகுதியில், மாணவர் மற்றும் இளைஞர் அமைப்பு சார்பில் சமூக ஒற்றுமையை வலியுறுத்தும் வகையில் மாணவர், இளைஞர் ஒற்றுமைக் கூடல் உற்சாகமாக நடைபெற்றது.தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகம் மற்றும் மனிதநேய மக்கள் கட்சியின் மாவட்ட தலைவர் ஜாகிர் உசேன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் ஏராளமான மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.நிகழ்ச்சியின் சிறப்பு அழைப்பாளராக மனித நேய மக்கள் கட்சியின் மாநில துணைப் பொதுச் செயலாளரும், தாம்பரம் மாநகராட்சி மாமன்ற உறுப்பினருமான யாக்கூப் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். அப்போது பேசிய அவர், சமூக ஒற்றுமை மற்றும் மத நல்லிணக்கம் நிலைத்திருக்க இளைஞர்களின் பங்களிப்பு மிகவும் அவசியம் என்று வலியுறுத்தினார். மேலும், கல்வி மட்டுமே தனிநபர் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான வலுவான அடித்தளம் என்றும், நாட்டின் வளர்ச்சியில் இளைஞர்களின் பங்கு முக்கியமானது என்றும் தெரிவித்தார்.நிகழ்ச்சியில் பேசிய தலைவர்கள், இளைஞர்கள் கல்வி, ஒழுக்கம் மற்றும் சமூகப் பணிகளில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும், சகோதரத்துவ உணர்வை வளர்த்து சமூக நல்லிணக்கத்தை பேணுவது காலத்தின் தேவை என்றும் குறிப்பிட்டனர்.மேலும், சமூக முன்னேற்றத்திற்காக மாணவர்களும் இளைஞர்களும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்றும், சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் சேவைகளில் தொடர்ந்து ஈடுபட வேண்டும் என்றும் அழைப்பு விடுத்தனர்.இந்த ஒற்றுமைக் கூடலில் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மஜ்லிஸ் நிர்வாகிகள், மாணவர் மற்றும் இளைஞர் அணியினர் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்று நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.




## மதுரை அருகே அரசுப் பேருந்தின் மீது ஆம்னி பேருந்து மோதிய விபத்தில் 5 பேர் உயிரிழப்பு

சென்னை, ஜூலை.14-
மதுரை கொட்டாம்பட்டி அருகே, சென்னையில் இருந்து மார்த்தாண்டம் நோக்கி சென்று கொண்டிருந்த ஆம்னி பேருந்து கட்டுப்பாட்டை இழந்து, எதிர்திசையில் வந்து கொண்டிருந்த அரசுப் பேருந்தின் மீது மோதியதில் 5 பேர் பரிதாபமாக உயிரிழந்ததுடன், 40 பேருக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்திருந்திப்பதாகவும் வெளியாகியுள்ள செய்திகள் மிகுந்த மன வேதனையளிக்கின்றன.Urban Transitஇவ்விபத்தில் பலியானோரின் குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கல்களை கனத்த இதயத்துடன் தெரிவித்துக் கொள்வதோடு, காயமடைந்தவர்கள் முழு மன மற்றும் உடல் நலத்துடன் விரைவில் குணமடைந்து வீடு திரும்ப எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொள்கிறேன்.மேலும், பொதுச் சொத்துக்கள் மற்றும் பயணிகளின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு, தரமான பேருந்துகளையும், அனுபவம் வாய்ந்த ஓட்டுநர்களையும் நியமித்து, எதிர்காலத்தில் இதுபோன்ற விபத்துகளைக் குறைக்க வழிவகை செய்ய வேண்டுமென தமிழக அரசையும், தனியார் போக்குவரத்து நிறுவனங்களையும் கேட்டுக் கொள்கிறேன்

## திருவள்ளூரில் உலக மக்கள் தொகை தின விழிப்புணர்வுப் பேரணி: மாவட்ட ஆட்சியர் தொடங்கி வைத்தார்




திருவள்ளூர், ஜூலை.14-
திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் கீழ் இயங்கும் மருத்துவம், ஊரகநலப்பணிகள் மற்றும் குடும்பநலம் சார்பில் உலக மக்கள் தொகை தினத்தை முன்னிட்டு பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் இன்று (13.07.2026) நடைபெற்றன. மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ச.கவிதா இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் அரசு அலுவலர்கள், கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்று மக்கள் தொகை விழிப்புணர்வு உறுதிமொழியினை ஏற்றுக்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து, மக்கள் தொகை தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட பேச்சுப் போட்டி மற்றும் கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவிகளுக்கு மாவட்ட ஆட்சியர் பாராட்டுச் சான்றிதழ்களையும் பரிசுகளையும் வழங்கினார். பின்னர், மக்கள் தொகை கட்டுப்பாடு குறித்த விழிப்புணர்வு வாகனத்தினையும், இருநூறுக்கும் மேற்பட்ட தனியார் கல்லூரி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்ட மாபெரும் விழிப்புணர்வுப் பேரணியையும் அவர் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்தப் பேரணியானது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தொடங்கி ஜே.என். சாலையிலுள்ள காமராசர் சிலை அருகில் நிறைவடைந்தது. பேரணியில் சென்ற மாணவர்கள் விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தியும், வழிநெடுகிலும் கோஷங்களை எழுப்பியும் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினர். இந்நிகழ்ச்சியில் உரையாற்றிய மாவட்ட ஆட்சியர், குடும்பக் கட்டுப்பாடு, பாலின சமத்துவம், தாய்வழி ஆரோக்கியம் மற்றும் மனித உரிமைகள் உள்ளிட்ட மக்கள் தொகை சார்ந்த பிரச்சினைகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் ஆண்டுதோறும் ஜூலை 11ஆம் தேதி உலக மக்கள் தொகை தினம் கொண்டாடப்படுவதாகத் தெரிவித்தார். 1989 ஆம் ஆண்டு உலக மக்கள் தொகை மாநாடு தொடங்கப்பட்டதன் தொடர்ச்சியாக, உலகளாவிய மக்கள் தொகை சவால்களை எதிர்கொள்ளும் நோக்கில் இந்த தினம் உருவாக்கப்பட்டதை அவர் சுட்டிக்காட்டினார். மேலும், மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்தவும், இனப்பெருக்க ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் 1952ஆம் ஆண்டிலேயே இந்தியாவில் தேசிய குடும்ப நலத் திட்டம் தொடங்கப்பட்டதை நினைவுகூர்ந்த அவர், இத்திட்டத்தின் மூலம் தாய் சேய் ஆரோக்கியம் மேம்படுத்தப்பட்டு, பல்வேறு கருத்தடை முறைகளை வழங்கி தகுந்த குடும்பக் கட்டுப்பாட்டைத் தேர்வு செய்ய தனிநபர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது என்றார்.

தொடர்ந்து பேசிய ஆட்சியர், தமிழ்நாட்டின் தற்போதைய மக்கள் தொகை 7.76 கோடியைக் கடந்துள்ள போதிலும், சிறந்த கல்வி மற்றும் நகரமயமாக்கலின் காரணமாக அதன் வளர்ச்சி விகிதம் மற்றும் கருவுறுதல் விகிதம் கணிசமாகக் குறைந்துள்ளதாகக் குறிப்பிட்டார். சமீபத்திய 202324 ஆம் ஆண்டிற்கான தேசிய குடும்ப சுகாதார கணக்கெடுப்பின்படி (NFHS-6), தமிழ்நாட்டின் மொத்த கருவுறுதல் விகிதம் (TFR) தேசிய சராசரியான 1.9ஐ விடக் கணிசமாகக் குறைந்து 1.3 ஆகப் பதிவாகியுள்ளது என்றும், கருத்தடை பயன்பாட்டு விகிதம் தேசிய சராசரியை விட அதிகமாக 68.6 சதவீதமாக உள்ளது என்றும் அவர் பெருமிதத்துடன் தெரிவித்தார்.இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் திருவள்ளூர் மாவட்ட சுகாதார அலுவலர் மரு.பிரியாராஜ், மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இணை இயக்குநர் (பொறுப்பு) மரு.பொற்செல்வி, குடும்பநலத் துணை இயக்குநர் மரு.சுரேஷ், மாவட்ட விரிவாக்க கல்வியாளர் திரு.திருமலா மற்றும் பல்வேறு கல்லூரி பேராசிரியர்கள், மாணவர்கள், துறை சார்ந்த அலுவலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு ஒலி ஒளி அமைப்பு தொழிலாளர்கள் நலச்சங்கம் செங்குன்றம் சுற்றுவட்டார கிளை ஆண்டு விழா



மாதவரம், ஜூலை.14-

மாதவரம் தொகுதி கிராண்ட்லையன் ஊராட்சி சாமியார்மடம் பகுதியில் உள்ள நெல்அரிசி வியாபாரிகள் சங்க திருமண மண்டபத்தில் தமிழ்நாடு ஒலி ஒளி அமைப்பு தொழிலாளர்கள் நலச்சங்கம் திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் சார்பில் செங்குன்றம் சுற்றுவட்டார கிளை ஆண்டு விழா திருவள்ளூர் மாவட்ட கௌரவத்தலைவர் மனோகரன், மாவட்ட தலைவர் தேவேந்திரன் ஆகியோர் தலைமையில் நடைபெற்று. மாவட்ட செயலாளர் வேலு, மாவட்ட பொருலாளர் குப்பன், மாவட்ட காப்பாளர் ரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னதாக செங்குன்றம் கிளை தலைவர் யுவராஜ், செயலாளர் செல்வம், பொருலாளர் மகேஷ் ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர். விழாவிற்கு சிறப்பு அழைப்பாளர்களாக நெல்அரிசி வியாபாரிகள் சங்க மாநில தலைவர் துளசிங்கம், செங்குன்றம் நெல்அரிசி வியாபாரிகள் சங்க தலைவர் கோபி, செயலாளர் லோகநாதன், பொருலாளர் குணசேகரன், ஆவடி ஆணையரகம் செங்குன்றம் சரக உதவி ஆணையாளர் பிராங்க்ளின்ரூபன், மாநில காப்பாளர் ரங்கநாதன், மாநில பொது செயலாளர் ரங்கநாதன், சென்னை மாவட்ட தலைவர் கருப்பையா, மாவட்ட செயலாளர் ராபர்ட்ஜோசப், மாவட்ட பொருலாளர் மதன் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரையாற்றினர். பின்னர் வாரியம் மற்றும் உறுப்பினர்கள் அடையாள அட்டைகளை வழங்கினர். இதில் தமிழ்நாடு ஒலி ஒளி அமைப்பு தொழிலாளர்கள் நலச்சங்கத்தின் அனைத்து நிலை நிர்வாகிகள், பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.



# ஊத்துக்கோட்டை அருகே சுருட்டப்பள்ளி சிவன் கோவிலில் நந்திபகவானுக்கு ப்ரதோஷ சிறப்பு பூஜை



திருவள்ளூர், ஜூலை.14-

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை அருகே ஆந்திரா மாநிலம் நாகலாப்புரம் மண்டலம் சுருட்டப்பள்ளி ஸ்ரீ பள்ளிக்கொண்டீஸ்வரர் தேவஸ்தானத்தில் நந்தி பகவானுக்கு ப்பிரதோஷ சிறப்பு பூஜை மிக விமர்சியாக நடைபெற்றது இப்பூஜையில் நந்தீஸ்வரருக்கு சிறப்பு அபிஷேகம் தீபாராதனை செய்து ஊர்வலமாக கொண்டுவரப்பட்டது இப்பூஜையை கோவில் நிர்வாக சேர்மன் பத்மநாபராஜு, மற்றும் செயல் அலுவலர், கோவில் தர்மகத்தா உறுப்பினர்கள், அம்சருத்ரய்யா, மண்டேலா, கிருஷ்ணய்யா, சீனிவாசலு, ஜெயந்தி முனிகுமார், தேவிதனசேகர், ஹேமந்த்குமார், நாகபூஷனம்மா, மஸ்தான், கார்த்திகேயன், கவிதா சந்திரசேகர், சிறப்பான ஏற்பாடுகளை செய்திருந்தனர் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தங்கள் நேர்த்திகடனை செலுத்தி சாமிதரிசனம் செய்து வழிபட்டனர்



# செங்குன்றம் ஸ்ரீ வீரபத்திரகாளியம்மன் ஆலயத்தில் தீமிதி திருவிழா

மாதவரம், ஜூலை.14-

மாதவரம் தொகுதி செங்குன்றம் நாரவாரிக்குப்பம் பேரூராட்சி காமராஜர் நகரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ வீரபத்ரகாளியம்மன் சமேத பாரமுனீஸ்வரர் ஆலயத்தில் 44ம் ஆண்டு தீமிதி திருவிழா ஆலய ஸ்தாபகர் மறைந்த லட்சுமியம்மாள், ஆலய நிர்வாகி விஸ்வநாதன், காப்பாளர் விஜயகுமார், கணக்காளர் சதீஷ்குமார் மற்றும் கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் கணபதி ஹோமம், குங்குமம் அஅபிஷேகம், காப்புகட்டுதல், விளக்குபூஜை, அக்னி கப்பறை எடுத்தல், கரகம் எடுத்தல் மற்றும் மூலவர்களுக்கு பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து வண்ணமலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு தீபா ராதனை காண்பிக்கப்பட் டது. பின்னர் பல்வேறு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. இதனைத்தொடர்ந்து 100 க்கும் மேற்பட்ட காப்புகட்டிய பக்தர்கள் தீகுண்டத்தில் இறங்கி தங்களின் நேர்த்தி கடனை பூர்த்தி செய்தனர். மேலும் இத்திருவிழாவை முன்னிட்டு ஆலயம் மற்றும் உபயதாரர்கள் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம் மற்றும் குளிர்பானங்கள் வழங்கினர். இத்தீமிதி திருவிழாவிற்கு ஆலய பொறுப்பாளர்கள், விழாகு ழுவின ர்கள்,மகளிர் குழுவினர்கள் உள்ளிட்ட கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் அம்மன் உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாள வானவேடிக்கைவுடன் திருவீதி உலாநடை பெற்றது.



# நல்லூர் ஸ்ரீ கன்னியம்மன் ஆலயத்தில் தீமிதி திருவிழா

மாதவரம், ஜூலை.14-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் நல்லூர் கிராமத்தில் பக்தர்களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் அருள்மிகு ஸ்ரீ கன்னியம்மன் ஆலயத்தில் 17ம் ஆண்டு தீமிதி திருவிழா கிராம நிர்வாகிகள் தலைவர் தாஸ், செயலாளர் ஜெயராமன், பொருலாளர் இராமலிங்கம், துணைத்தலைவர் சீனிவாசன், துணை செயலாளர் துரைவேல், துணை பொருலாளர் ஹரிகிருஷ்ணன், கௌரவ ஆலோசகர்கள் விஜயராகவன், சூரியநாராயணன், குணசேகர், கணக்கு தணிக்கையாளர்கள் பழனி, சங்கர் மற்றும் கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் கணபதி பூஜையுடன் கொடிஏற்றுதல், பால்குடம் எடுத்தல், பெருமாள் மற்றும் செல்லியம்மனுக்கு, சிறப்பு அபிஷேகம் மற்றும் தீபாரதனை, கூழ்வார்த்தல், பொங்கல் வைத்தல்,தெருக்கூத்து,கரகம் எடுத்தல், சிலைவைத்தல்,காப்புகட்டுதல் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. பின்னர் சுமார் 200 க்கும் மேற்பட்ட காப்புகட்டிய பக்தர்கள் தீகுண்டத்தில் இறங்கி தங்களின் நேர்த்தி கடனை பூர்த்தி செய்தனர். மேலும் இத்திருவிழாவை முன்னிட்டு ஆலயம் மற்றும் உபயதாரர்கள் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம், குளிர்பானங்கள் வழங்கினர். இத்தீமிதி திருவிழாவிற்கு சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு அர்ச்சனை செய்து சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் அம்மன் உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாள வானவேடிக்கைவுடன் திருவீதி உலாநடைபெற்றது.



# பல்லாவரத்தில் சிறு மின்விசை நீர்த்தேக்க தொட்டி 2வது மண்டல குழு தலைவர் ஜோசப் அண்ணாதுரை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்

பல்லாவரம், ஜூலை.14-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்ற தொகுதி தாம்பரம் மாநகராட்சி, 2வது மண்டலம், 17வது வார்டு, லத்தீப் காலனி, தர்கா காலனி பகுதிகளில் ஏராளமான பொதுமக்கள் வசித்து வருகின்றனர்.இந்நிலையில் அப்பகுதியில் நிலவி வரும் குடிநீர் தட்டுப்பாட்டை சரி செய்து தர வேண்டும் என முன்னாள் திமுக சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி இடம் அப்பகுதி பொதுமக்கள் சார்பில் கோரிக்கை விடுத்தனர். இந்த கோரிக்கையை ஏற்று கடந்த திமுக ஆட்சியில் தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கப்பட்டு மேற்கண்ட பகுதிகளில் சிறு மின்விசை நீர் தேக்க தொட்டி அமைக்கும் பணிகள் நடைபெற்றது. அந்தப் பணிகள் அனைத்தும் முடிவடைந்த நிலையில் சிறு மின்விசை நீர் தேக்க தொட்டியை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு 2வது மண்டல குழு தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை திறந்து வைத்தார். உடன் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கோ.ஜானகிராமன், வட்ட செயலாளர் டி.எச். பிரான்சிஸ் பால், ஷாகுல் அமீத், சரவணன், குடியிருப்போர் நல்வாழ் சங்க நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள் உட்பட பலர் உடன் இருந்தனர்.



# நீலகிரி மாவட்ட திமுக நகர ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள் கூட்டம்

நீலகிரி, ஜூலை.14-

நீலகிரி மாவட்ட திமுக நகர ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள் கூட்டம் மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட கழக பொறுப்பாளர் குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் கே.எம்.ராஜூ தலைமையில் நடைபெற்றதுமாவட்ட துணை செயலாளர் ரவிகுமார் வரவேற்றார். மாவட்ட அவை தலைவர் போஜன், மாவட்ட பொருளாளர் நாசர் அலி, தலைமை செயற்குழு உறுப்பினர் தம்பி இஸ்மாயில் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் அனைத்து நகர ஒன்றிய பேரூர் கழக பகுதிகளிலும் செயல்வீரர்கள் கூட்டங்கள் நடத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டது.கூட்டத்தில் நகர கழக செயலாளர்கள் ஜார்ஜ், ராமசாமி, ஒன்றிய கழக செயலாளர்கள் பரமசிவன், தொரை, காமராஜ், லாரன்ஸ், நெல்லை கண்ணன், பீமன், பிரேம்குமார், சிவானந்தராஜா, சுஜேஷ், உத்தமன், ஜெகதீசன், பேரூர் கழக செயலாளர்கள் பிரகாஷ்குமார், உதயகுமார், நடராஜ், சதீஷ்குமார், ரமேஷ்குமார், சஞ்சீவ்குமார், சுந்தர்ராஜ், முத்து, சுப்ரமணி, , மார்டின் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.கூட்ட முடிவில் மாவட்ட அவை தலைவர் போஜன் அவர்கள் நன்றி கூறினார்.




■ கிருஷ்ணகிரி ஆடவர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வரும் 32 வது மாங்கனி கண்காட்சியில் கிருஷ்ணகிரி மாவட்டத்தின் சிறப்பு விளையாட்டான மல்லர் கம்பம் நிகழ்ச்சி நடைபெற்றது. ஏராளமான பொதுமக்கள் கண்டு ரசித்தனர்.



■ மதுரை மாவட்டம்,கொட்டாம்பட்டி அருகே அரசுப் பேருந்தும், தனியார் ஆம்னி பேருந்தும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் காயமடைந்து மதுரை அரசு இராசாசி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா, ஆகியோர் நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்து அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் சிகிச்சை குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தனர்.மதுரை மேற்கு சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். தங்கப்பாண்டி , மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் எம்.எம்.கோபிசன் ஆகியோர் உடன் உள்ளனர்.

# 600 ஆண்டுகள் பழமையான சிவகாமி அம்பாள் உடனுறை நடராஜர் கோவிலில் பாலாலய பிரதிஷ்டை முன்னேற்பாடு: சிறப்பு பூஜையில் திரளான பக்தர்கள் பங்கேற்பு



கிருஷ்ணகிரி, ஜூலை.14-

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டணம் திருநீலகண்டர் தெருவில், 600 ஆண்டுகள் பழமையான சிவகாமி அம்பாள் உடனுறை நடராஜர் கோவில் உள்ளது. இங்கு, 600 ஆண்டுகள் பழமையான அரூர் தீர்த்தகிரீஸ்வரர் கோவில் காலத்திற்கு இணையான செப்பேடுகள் இக்கோவிலில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. பழைய கோவில் கட்டடத்தை அகற்றி, அதே இடத்தில் ஆகம விதிப்படி புதிய கோவில் கட்டும் திருப்பணிகள் விரைவில் தொடங்க உள்ளன. இதையொட்டி, பாலாலய பிரதிஷ்டை நடப்பதற்கான முன்னேற்பாடாக, நேற்று காலை முதல் மாலை வரை சிறப்பு பூஜை நடந்தது. தர்மபுரி குமாரசுவாமிப்பேட்டையைச் சேர்ந்த இந்துமதி சிவனடியார் தலைமையில், பிரதோஷ குழுவினர் திருவாசகம் முற்றோதல் நிகழ்ச்சியை நடத்தினர். தொடர்ந்து, திருவாசகப் பாடல்கள் பாடப்பட்டு, சிவபெருமானுக்கு சிறப்பு வழிபாடுகள் நடந்தது. தொடர்ந்து, நடராஜருக்கு, சிறப்பு அபிஷேகம், அலங்காரம், தீபாராதனை மற்றும் பிரசாதம் வழங்கப்பட்டன. இதில், சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான சிவனடியார்களும், பக்தர்களும் பங்கேற்றனர்

# தமிழ்நாடு நாள் விழா: மாணவர்களுக்கு கட்டுரை, பேச்சுப் போட்டிகள் - ரூ.10,000 முதல் பரிசு

சிவகங்கை, ஜூலை .14-

தமிழ்நாடு நாள் விழாவை முன்னிட்டு, தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் சிவகங்கை மாவட்ட அளவில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவர்களுக்கான கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் வரும் 15.07.2026 (புதன்கிழமை) காலை 10.00 மணிக்கு, சிவகங்கை மருதுபாண்டியர் நகர் அரசு மேல்நிலைப்பள்ளி கூட்ட அரங்கில் நடைபெற உள்ளதாக மாவட்ட ஆட்சியர் ப. ஆகாஷ், தெரிவித்துள்ளார்.பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தனது வாழ்த்துச் செய்தியில், மாணவர்களின்



தமிழ் அறிவையும் படைப்பாற்றலையும் ஊக்குவிக்கும் வகையில் இந்தப் போட்டிகள் நடத்தப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.மாவட்ட அளவில் நடைபெறும் போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு முதல் பரிசு ரூ.10,000, இரண்டாம் பரிசு ரூ.7,000, மூன்றாம் பரிசு ரூ.5,000 மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.கட்டுரைப் போட்டி தலைப்பு:தமிழ்நாடு நாள்: கருவானது முதல் உருவானது வரைபேச்சுப் போட்டி தலைப்புகள்:நான் விரும்பும் தமிழ்நாடுஅன்றைய மெட்ராஸ் மாகாணம் - இன்றைய நவீன தமிழ்நாடு இளைஞர்களின் பார்வையில் தமிழ்நாடு கல்வியில் சிறந்த தமிழ்நாடுவீரம் செறிந்த தமிழ்நாடு போட்டிகளுக்கான பங்கேற்பு விண்ணப்பங்கள் மற்றும் விதிமுறைகள் முதன்மைக் கல்வி அலுவலர் மூலம் அனைத்து பள்ளிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், மாணவர்கள் இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி போட்டிகளில் பங்கேற்று பயனடையுமாறும் மாவட்ட ஆட்சியர் ப. ஆகாஷ் கேட்டுக் கொண்டுள்ளார்.

# உலக மக்கள் தொகை தின விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து தொடங்கி வைத்த மாவட்ட ஆட்சியர்

செங்கல்பட்டு, ஜூலை.14-

செங்கல்பட்டு மாவட்டம் உலக மக்கள் தொகை தினத்தை முன்னிட்டு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை குடும்ப நலச் செயலகம் சார்பில் நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சியர் மருத்துவர் மு. வீரப்பன், நேற்று (13.07.2026) கொடியசைத்து தொடங்கி வைத்தார்.இந்த பேரணியில் 100க்கும் மேற்பட்ட நர்சிங் பள்ளி மற்றும் நர்சிங்



கல்லூரி மாணவ, மாணவிகள் விழிப்புணர்வு பதாகைகளுடன் கலந்து கொண்டு, திட்டமிட்ட குடும்பம், திருமணத்திற்கான சரியான வயது, முதல் குழந்தை மற்றும் இரண்டாவது குழந்தைக்கு இடையேயான தேவையான இடைவெளி, கர்ப்பிணிப் பெண்களுக்கான பாதுகாப்பான சூழல், தாய் சேய் நலன், பெண்கள் கல்வி மேம்பாடு, இளம் வயது திருமணம் மற்றும் கர்ப்பத்தைத் தடுப்பது உள்ளிட்ட மக்கள் தொகை நிலைப்படுத்தலின் அவசியத்தை பொதுமக்களிடையே எடுத்துரைத்தனர். நிகழ்ச்சியில் இணை இயக்குநர் மருத்துவர் லீனா மைக்கேல், துணை இயக்குநர் மருத்துவர் கல்பனா, மாவட்ட சுகாதார அலுவலர் மருத்துவர் சதீஷ்குமார், மக்கள் கல்வி மற்றும் தகவல் தொடர்பு அலுவலர் மு. தாரா மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# திருவள்ளுவர் இளைஞர் சுய உதவிக்குழு ஆண்டு விழா; மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கல்

மானாமதுரை, ஜூலை.14-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் திருவள்ளுவர் இளைஞர் சுய உதவிக்குழுவின் 24 ஆம் ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு பள்ளி மாணவர்களுக்கு இலவச கல்வி உபகரணங்கள் வழங்கும் விழா மற்றும் 10, 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது.

விழாவில் கிராம நிர்வாக அலுவலர் மீனா பிரபாகரன், SERD தொண்டு நிறுவன



இயக்குநர் டாக்டர் எல். பாண்டி, ஆதரவு அறக்கட்டளை இயக்குநர் குரு செல்வம், நகர்மன்ற உறுப்பினர் எஸ். நதியா செல்வம் உள்ளிட்டோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் மற்றும் பரிசுகளை வழங்கினர். நிகழ்ச்சியில் பெற்றோர்கள், பொதுமக்கள் மற்றும் திருவள்ளுவர் இளைஞர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.



■ திருப்பூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை வட்டம், காடம்பாறை மின் நிலைய வளாகத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் குருமலை, மேல்குருமலை, பூச்சிகொட்டாம்பாறை, குழிப்பட்டி, மாவடப்பு, காட்டுப்பட்டி மற்றும் கருமுட்டி ஆகிய வனக்குடியிப்பு பகுதியில் வாழும் மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து நடைபெற்ற சிறப்பு முகாமினை பார்வையிட்டார் கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் க..கார்த்திகேயன், மாவட்ட வன அலுவலர் ராஜேஷ், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) மதுரா, உடுமலைப்பேட்டை வருவாய் கோட்டாட்சியர் குமார், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் சதீஷ் ஆகியோர் உள்ளனர்.



■ சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை துணை மின் நிலையத்தில் மாதாந்திரப் பராமரிப்புப் பணிகள் தேவகோட்டை நகர் பகுதி, ராம் நகர், உதையாச்சி, உடப்பன்பட்டி, எழுவன்கோட்டை, கண்ணங்கோட்டை, காரை, கோட்டூர்வேப்பங்குளம், கல்லங்குடி, நானாகுடி, திருமணவயல், நாகாடி, அனுமந்தகுடி, ஊரணிக்கோட்டை, பனங்குளம், மாவிடுத்திக்கோட்டை, காயாவயல், புளியால், கண்டதேவி, ஆராவயல், உஞ்சனை உள்ளிட்ட பகுதிகளில் இன்று (ஜூலை 14) காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை மின்தடை இருக்கும் என மின் செயற்பொறியாளர் சந்திரசூடன் அறிவித்துள்ளார்

# 500 ஆண்டுகள் பழமையான மணிகண்டேஸ்வரர் கோயிலை சீரமைக்க அனுமதி கோரி ஆட்சியரிடம் கிராம மக்கள் மனு

மதுரை, ஜூலை.14-

மதுரை அருகே பனையூர் கிராமத்தில் சுமார் 500 ஆண்டுகள் பழமையான மணிகண்டேஸ்வரர் கோயில் சிதிலமடைந்து இடிந்து விழும் நிலையில் இருப்பதாகக் கூறி, அதனைச் சீரமைக்க அனுமதி வழங்கக் கோரி கிராம மக்கள் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்துள்ளனர்.மதுரை தெற்கு வட்டத்திற்குட்பட்ட பனையூர் கிராமத்தில் (புல எண் 80/9) அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க மணிகண்டேஸ்வரர் ஆலயம் நீண்டகாலமாக பராமரிப்பின்றி சிதிலமடைந்துள்ளதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். இதனால் தொன்மையான இக்கோயில் முற்றிலும் அழியும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.கோயிலைப் பாதுகாக்கும் நோக்கில், கிராம மக்கள் தங்களது சொந்த நிதியில் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள முன்வந்ததாகவும், ஆனால் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் அவரது உதவியாளர் இதற்கு அனுமதி மறுத்து பணிகளைத் தடுத்து வருவதாகவும் மனுவில் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.மேலும், சீரமைப்புப் பணிகளை மேற்கொண்டால் காவல்துறையில் வழக்குப் பதிவு செய்யப்படும் என அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமூக ஆர்வலர் ராஜ்குமார் தலைமையில் மாவட்ட ஆட்சியரிடம் அளிக்கப்பட்ட மனுவில், கோயிலைச் சீரமைக்க கிராம மக்களுக்கு உரிய அனுமதி வழங்க வேண்டும் அல்லது வருவாய்த் துறையினர் நேரடியாக சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

# மத்தூர் சுங்கச்சாவடி ஊழியர்களை கடத்திய சம்பவத்தில் 4 சிறுவர்கள் உட்பட 5 பேர் கைது!

கிருஷ்ணகிரி, ஜூலை.14-

மத்தூர் சுங்கச்சாவடி ஊழியர்களை கடத்திய சம்பவத்தில் 4 சிறுவர்கள் உட்பட 5 பேர் கைது செய்யப்பட்டார். சுங்கச்சாவடியில் கட்டணம் செலுத்தாமல் வாகனங்களை அனுமதிக்கக் கோரி தகராறு ஏற்பட்டது. தகராறில் 2 சுங்கச்சாவடி ஊழியர்களை 30க்கும் மேற்பட்டோர் கொண்ட கும்பல் தாக்கி கடத்திச் சென்றதாக புகார் தெரிவிக்கப்பட்டது. கடத்தப்பட்ட ஊழியர்களை போலீசார் மீட்ட நிலையில் சக்திவேல் மற்றும் 4 சிறுவர்கள் உட்பட 5 பேரை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்

# திருச்சியில் போதை ஊசி செலுத்திக் கொண்டதால் இளைஞர் உயிரிழந்ததாக தகவல்!

திருச்சி, ஜூலை.14-

புத்தூர் அருகே உள்ள கல்லாங்காடு பகுதியில் போதை ஊசி செலுத்திக்கொண்ட சஞ்சய் (20) என்ற இளைஞர் உயிரிழந்தார். நேற்றிரவு சஞ்சய் போதை ஊசி செலுத்தியதாக கூறப்படும் நிலையில் வேறு காரணத்தால் உயிரிழப்பா? என்றும் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். திருச்சியில் போதை ஊசிப் பழக்கத்தால் கடந்த 40 நாட்களில் நடந்த 3வது மரணம் இது. ஜூன் 8ம் தேதி இளம்பெண் ஒருவரும், 30ம் தேதி இளைஞர் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்

**மாண்புமிகு கூடுதல் மாவட்ட உரிமையியல் நிதிமன்றம், திருப்பத்தூர் மாவட்டம்.**

IA.NO. 2/2025 IN OS.NO. 158/2016

**M.மேகநாதன்**
**எதிராக**
**....மனுதாரர்/வாதி.**
**1.M.வீராசாமி.**
**2.M.சம்பத் @ சுப்புரமணி (இறந்துவிட்டார்)**
**3.தாமரைச்செல்வி.**
**4.சுமதி.**
**5..**
**....எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதகள்.**

**அறிவிப்பு**

**மேற்படி அசல் வழக்கில் இடை மனு எண். 2 / 2025ல் மனுதாரர் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக மனு தாக்கள் செய்து திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம் பெரியகரம் அஞ்சல் பட்டாளம்மன் கோவில் தெருவில் வசிக்கும் சுமார் 47 வயதுள்ள காலம் சென்ற சம்பத் (எ) சுப்பிரமணி மனைவி தாமரைச்செல்வி (3ஆம் எதிர்மனுதாரர்), திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம் கசிநாயக்கன்பட்டி, கந்திலி ஊராட்சியில் வசிக்கும் சுமார் 28 வயதுள்ள காலம் சென்ற சம்பத் (எ) சுப்பிரமணி மகளும் ரமேஷ் மனைவியுமான சுமதி (4ஆம் எதிர்மனுதாரர்), திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம் பெரியகரம் அஞ்சல் பட்டாளம்மன் கோவில் தெருவில் வசிக்கும்சுமார் 23 வயதுள்ள காலம் சென்ற சம்பத் (எ) சுப்பிரமணி மகன் ஜீவா (6ஆம் எதிர்மனுதாரர்) ஆகிய எதிர்மனுதாரர்கள் ஆஜருக்காக வேண்டி கணம் நீதிமன்றத்தில் 20/07/2026 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி மனுவில் மனுதாரர் கோரிக்கை குறித்து 3,4,6 எதிர்மனுதாரர்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் வருகிற 20/07/2026 அன்று திருப்பத்தூர் மாண்புமிகு கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் காலை 10.00 மணி அளவில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி ஆட்சேபனை தெரிவித்துக் கொள்ளலாம் என்றும் தவரும்பட்சத்தில் உங்களுக்கு எதிராக ஒருதலை பட்சமாக தீர்ப்பு பிறப்பிக்கப்படும் என்பதை அறியவும்.**

**நீதிமன்ற உத்திரவுப்படி**



■ செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக கூட்டரங்கத்தில் மக்கள் குறைதீர்க்கும் முகாமில் பொதுமக்களிடமிருந்து பல்துறை சார்ந்த 541 மனுக்களை மாவட்ட ஆட்சியர் மருத்துவர் மு.வீரப்பன், பெற்றுக்கொண்டு இருளர் பழங்குடியினத்தை சார்ந்த 99 நபர்களுக்கு சாதி சான்றிதழ் மற்றும் பிறப்பு சான்றிதழையும், மாற்றுதிறனாளி பயனாளிகளுக்கு ரூ.89,400 மதிப்பிலான நலத்திட்டங்களையும் வழங்கினார். இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மா.கணேஷ் குமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் .கே.ஸ்ருதி மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தடை செய்யப்பட்ட குட்கா விற்பனைக்கு மதுரையில் அதிரடி!

# 6,616 கடைகளில் ஆய்வு - 124.285 கிலோ பொருட்கள் பறிமுதல்; ரூ.13.25 லட்சம் அபராதம், 39 கடைகள் சீல்

மதுரை, ஜூலை.14-

மதுரை மாவட்டத்தில் தடை செய்யப்பட்ட குட்கா, பான் மசாலா மற்றும் பிற புகையிலைப் பொருட்கள் விற்பனையை ஒழிக்கும் நோக்கில், உணவு பாதுகாப்புத்துறை மற்றும் காவல்துறை கடந்த ஜூன் மாதம் முழுவதும் தீவிர சோதனைகளை மேற்கொண்டன.கடந்த ஜூன் 1 முதல் 30ம் தேதி வரை மாவட்டம் முழுவதும் 6,616 கடைகளில் ஆய்வு நடத்தப்பட்டதில், 45 கடைகளில் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வந்தது கண்டறியப்பட்டது. இதில் உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் மேற்கொண்ட ஆய்வில் 15 கடைகளிலும், உணவு பாதுகாப்புத்துறை-காவல்துறை இணைந்து நடத்திய சோதனையில் 6 கடைகளிலும், காவல்துறையினர் பதிவு செய்த 24 வழக்குகளிலும் விதிமீறல்கள் உறுதி செய்யப்பட்டன. விதிமீறலில் ஈடுபட்ட 39 கடைகள் சீல் வைக்கப்பட்டதுடன், மொத்தமாக ரூ.13.25 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டது.சோதனைகளின் போது உணவு பாதுகாப்புத்துறை மற்றும் காவல்துறையினர் இணைந்து 124.285 கிலோ தடை செய்யப்பட்ட குட்கா, பான் மசாலா உள்ளிட்ட புகையிலைப் பொருட்களை பறிமுதல் செய்தனர். மதுரை மாவட்டத்தில் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் விற்பனையை முற்றிலும் தடுக்க இதுபோன்ற அதிரடி சோதனைகள் தொடர்ந்து நடைபெறும் என்றும், தங்கள் பகுதிகளில் இத்தகைய பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக தகவல் தெரிந்தால் உடனடியாக உணவு பாதுகாப்புத்துறை அல்லது காவல்துறைக்கு தெரிவித்து பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்றும் அதிகாரிகள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161